**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 13.02.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகபயிர்பாதுகாப்பு துறை மாணவர்களுக்கு பேயர் மேதா உதவித் தொகை**

பேயர்- மேதா உதவித் தொகை திட்டம் வாழ்க்கை அறிவியல் , உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் மருந்துத்துறைகளில் உள்ள மாணவர்களுக்கு உயர் கல்வி நிதி உதவி வழங்குவதாகும் . இதனால் அவர்கள் முதுகலை மற்றும் முனைவர் பட்டங்களைத் தொடரலாம் . நிதி உதவி பற்றாக்குறையால் கல்வியை தொடர இயலாத நிலையில் இருக்கும் மாணவர்களுக்கு பேயர்- மேதா உதவித் தொகை வழங்கப்படுகிறது . பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவு மற்றும் குறைந்த வருமானம் பெறும் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமே இந்த உதவித் தொகை திட்டத்திற்கு தகுதியுடையவர்கள்.

2022 ஆம் ஆண்டிற்கான உதவித் தொகைக்கான விண்ணப்பங்க ள் இணையதளம் வாயிலாக வரவேற்கப்பட்டது . விண்ணப்பித்த மாணவர்கள் இணையவழி மூலம் ஜனவரியில் நேர்காணல் செய்யப்பட்டனர் . தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் முடிவுகள் 08.02.2023 அன்று பேயர் இணையதளத்தில் வெளியிடப்பட்டன. கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள பூச்சியியல் துறையில் முனைவர் பட்ட ப்படிப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணவி பரிபூரணி , முதுகலை படிப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணவிகள் சௌமியா, கிருத்திகா, சாந்தினி மற்றும் பயிர் நோயியல் படித்துக் கொண்டிருக்கும் மாணவர் கிஷோர் குமார் ஆகியோர் பேயர் - மேதா உயர்கல் வி உதவித் தொகை பரிசீலனைக்காக பேயர் நிறுவனத்திற்கு தங்கள் ஆராய்ச்சி முன் மொழிவை வழங்கியிருந்தனர் . விண்ணப்பித்திருந்த மாணவர்களுள், ஐந்து மாணவர்கள் உதவித் தொகை பெறுவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். உயர் கல்வி ஊக்கத் தொகை பெறவுள்ள மாணவர்களுக்கு பல்கலைக்கழக துணை வேந்தர், பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் , முதன்மையர் (முதுகலை படிப்பு ), வேளாண் பூச்சியியல் துறைத் தலைவர், பயிர் நோயியல் துறை தலைவர் மற்றும் பிற கல்வியாளர்கள் பாராட்டி ஆராய்ச்சியில் சாதனை புரிய வேண்டும் என வாழ்த்து தெரிவித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**